**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of Criminal Procedure)
**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

Case No: **SPL.S.C.No.53/2019**

Prosecution Witness : **LW – 66 / PW - 47**

Name : முரளி Taluk :

S/o. : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day
15.04.2026

(1, 9, 12, 13, 15, 19, 20, 21, 22, 23, 24, 25, 27, 29, 30, 31, 33 எதிரிகளுக்காக குவிமுச 317 மனு ஏற்பு. 3, 11, 28 எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்கள் மீதான குற்றம் அற்றுபோனது. மற்ற எதிரிகள் ஆஜர்.)

இந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற WP 33878/2024 உத்தரவின் அடிப்படையில் Home (Courts. VI A) Department 09.12.2024 தேதியிட்ட G.O.(D). No. 1485 ன் படி வழக்கறிஞர் திரு.B.மோகன் சிறப்பு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டு ஆஜரானார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். 18.04.2019 அன்றும் அதே இடத்தில் தான் பணிபுரிந்தேன். அப்போது, ரவி, த/பெ.வடிவேல் என்பவர் அன்று மாலை 06.45 மணிக்கு ஜெயங்கொண்டம் மருத்துவமனையிலிருந்து மேல்சிகிச்சைக்காக தஞ்சை மருத்துவக் கல்லூரி அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார். அவர் வயது 48. அவருக்கு வலது கையில் வலி இருந்ததாக கூறினார். எனவே வலது கை எக்ஸ்ரே எடுக்கப்பட்டது. அதில் வலது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டிருப்பதாக தெரிந்தது. எனவே அவரை உள்நோயாளியாக அனுமதித்தேன். அவரது எண்.23248, அவர் 14.05.2019 அன்று மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று நான் சான்றிதழ் கொடுத்தேன், அது தற்போது **அ.த.சா.ஆ.11** ஆக

குறியீடு செய்யப்படுகின்றது. போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் அப்போது எதுவும் விசாரிக்கவில்லை, தற்போது தான் சம்மன் வந்தது.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

ரவியின் சிகிச்சை ஆவணம் கொண்டு வந்திருக்கிறேனா என்றால் கொண்டு வந்திருக்கிறேன். அது தற்போது என்னிடம் உள்ளது. ரவியின் எக்ஸ்ரே நகல் இல்லை. ரவிக்கு கொடுங்காயமோ எலும்பு முறிவோ இல்லை என்றாலும், வழக்கிற்காக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. சாட்சி அந்த ஆவணங்கள் தற்போது தன்னிடம் இருப்பதாக கூறியதால், அந்த ஆவணங்கள் **அ.த.சா.ஆ.12** கோர்வையாக நீதிமன்றத்தால் குறியீடு செய்யப்படுகின்றது. (எதிர் தரப்பு வழக்கறிஞர் மேற்படி ஆவணங்களின் நகல் தங்களிடம் கொடுக்கப்படவில்லை என்று ஆட்சேபித்தார்.)

**<u>மறு விசாரணை–</u>**இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of Criminal Procedure)
**<u>IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.</u>**

Case No: **SPL.S.C.No.53/2019**

Prosecution Witness : **LW -67 / PW - 48**

Name : மாரிமுத்து Taluk :

S/o. : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day <u>15.04.2026</u>

(1, 9, 12, 13, 15, 19, 20, 21, 22, 23, 24, 25, 27, 29, 30, 31, 33 எதிரிகளுக்காக குவிமுச 317 மனு ஏற்பு. 3, 11, 28 எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்கள் மீதான குற்றம் அற்றுபோனது. மற்ற எதிரிகள் ஆஜர்.)

<u>இந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற WP 33878/2024 உத்தரவின் அடிப்படையில் Home (Courts. VI A) Department 09.12.2024 தேதியிட்ட G.O.(D). No. 1485 ன் படி வழக்கறிஞர் திரு.B.மோகன் சிறப்பு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டு ஆஜரானார்.</u>

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.04.2019 அன்று காலை 09.28 மணியளவில் அதே இடத்தில் தான் பணிபுரிந்தேன். அப்போது திரு.செல்வராஜ், த/பெ.மாணிக்கம், 50 வயது ஆண், ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையிலிருந்து மேல்சிகிச்சைக்காக அனுப்பட்டு உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்ட நபரை பரிசோதித்து, அவருக்கு உச்சந்தலையில் 3 செ.மீ அளவில் தையல் இடப்பட்ட காயம் இருந்தது. அவருக்கு CT ஸ்கேன் எடுத்து, மூளை அறுவை சிகிச்சை நிபுணரின் அறிவுரை பெற்றப்பட்டது. சிகிச்சை முடிந்த பின்பு கடந்த 22.04.2019 அன்று அவரை மருத்துவமனையிலிருந்து விடுவித்தேன். அவருக்கு ஏற்பட்டிருந்த காயத்தின் தன்மை சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். அந்த விடுவிப்பு அறிக்கை **அ.த.சா.ஆ.**13 ஆக குறியீடு செய்யப்படுகின்றது. செல்வராஜின் மருத்துவ அறிக்கை

மற்றும் குறிப்புகள் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் மருத்துவ பதிவேடு துறையில் பராமரிக்கப்படுகிறது.

அதே நாள் 09.28 மணியளவில் திரு.தேவா, த/பெ.கருப்பன், ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையிலிருந்து, மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு உள்நோயாளியாக சேர்ந்தார். அவரை பரிசோதித்ததில் இடது பக்க தலையில் 3 செ.மீ அளவில் தையல் இடப்பட்ட காயம் இருந்தது. அவருக்கு CT ஸ்கேன் எடுத்து மூளை அறுவை சிகிச்சை நிபுணரின் அறிவுரை பெறப்பட்டு, சிகிச்சை முடிந்த பின்பு கடந்த 21.04.2019 அன்று அவர் மருத்துவமனையிலிருந்து விடுவிப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்னை சாதாரண காயம் என்று சான்று அளித்தேன். அந்த விடுவிப்பு அறிக்கை **அ.த.சா.ஆ–14** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அதே நாள் 09.24 மணியளவில் திருமதி.மணிமேகலை, க/பெ.கருப்பன், ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையிலிருந்து, மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு உள்நோயாளியாக சேர்ந்தார். அவரை பரிசோதித்ததில் இடது பக்க தலையில் 4 செ.மீ அளவில் தையல் இடப்பட்ட காயம் இருந்தது. அவருக்கு CT ஸ்கேன் எடுத்து மூளை அறுவை சிகிச்சை நிபுணரின் அறிவுரை பெறப்பட்டு, சிகிச்சை முடிந்த பின்பு கடந்த 22.04.2019 அன்று அவர் மருத்துவமனையிலிருந்து விடுவிப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்னை சாதாரண காயம் என்று சான்று அளித்தேன். அந்த விடுவிப்பு அறிக்கை **அ.த.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–இல்லை என்று சொல்லப்பட்டது.</u>

<u>மறு விசாரணை–</u>இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of Criminal Procedure)
**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

Case No: **SPL.S.C.No.53/2019**

Prosecution Witness : **LW - 69/ PW - 49**

Name : ரவிச்சந்திரன் Taluk :

S/o. : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **15.04.2026**

(1, 9, 12, 13, 15, 19, 20, 21, 22, 23, 24, 25, 27, 29, 30, 31, 33 எதிரிகளுக்காக குவிமுச 317 மனு ஏற்பு. 3, 11, 28 எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்கள் மீதான குற்றம் அற்றுபோனது. மற்ற எதிரிகள் ஆஜர்.)

இந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற WP 33878/2024 உத்தரவின் அடிப்படையில் Home (Courts. VI A) Department 09.12.2024 தேதியிட்ட G.O.(D). No. 1485 ன் படி வழக்கறிஞர் திரு.B.மோகன் சிறப்பு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டு ஆஜரானார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது அரியலூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அறுவை சிகிச்சை துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். 18.04.2019 அன்று ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் இருப்பு பணியில் இருந்தபோது, மதியம் 04.20 மணியளவில் பொன்பரப்பி ஊரை சேர்ந்த ரவி, த/பெ.வடிவேல் என்பவரை அவரது அண்ணன் தேவா என்பவர் சிகிக்சைக்கு அழைத்து வந்தார். மேற்படி ரவியை பரிசோதித்தபோது, தனக்கு தெரிந்த 10 ஆண் நபர்களால் இரும்பு கம்பி மற்றும் மரக்கட்டையால் 18.04.2019 அன்று மதியம் 03.30 மணியளவில் பொன்பரப்பியில் தன்னை தாக்கியதாக கூறினார். அவருக்கு கீழ் கண்ட காயங்கள் காணப்பட்டன. 1. இடது முன்னங்கையில் ஒரு கன்றிய காயம் 2X2cm அளவில் காணப்பட்டது. 2. வலது முன்னங்கையில் 2X2cm அளவில் கன்றிய காயம் காணப்பட்டது. 3. தலையின் உச்சிப்பகுதியில் 3x2x1 cm அளவில் கிழிந்த காயம் காணப்பட்டது. மேல்சிசிக்சைக்காக தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்டு, 18.04.2019

அன்று மாலை 06.30 மணியளவில் அனுப்பபட்டார். அங்கு சிகிச்சை செய்த மருத்துவர் முரளி, தன்னுடைய அறிக்கையில் வலது முன்னங்கையில் அல்னா என்ற எலும்பு உடைவு ஏற்பட்டுள்ளது என்றும், காயத்தின் தன்மை கொடுங்காயம் என்றும் கருத்துரை வழங்கினார். அவர் வழங்கிய கருத்துரையின் படி இறுதி கருத்துரையாக ரவிக்கு ஏற்பட்ட 2ம் காயத்தின் தன்மை கொடுங்காயம் என்று மற்ற காயங்கள் சாதாரண காயங்கள் என்றும் சான்று அளித்தேன். 16.05.2019 அன்று அந்த நபர் தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார். காயம்பட்ட நபர் சிகிச்சையில் சேர்ந்தபோது, தனக்கு தெரிந்த 10 ஆண் நபர்கள் இரும்பு கம்பியால் மற்றும் மரக்கட்டையால் தாக்கியதாக கூறினார். அந்த காயங்கள் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் ஏற்பட வாய்ப்புண்டு. நான் ரவிக்கு வழங்கிய காயச்சான்று **அ.த.சா.ஆ.**16 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

அதே தேதியில் மதியம் 04.30 மணியளவில் பொன்பரப்பி ஊரை சேர்ந்த செல்வராஜ், த/பெ.மணிகண்டன், வயது 50 ஆண் என்பவரை அவரது சகோதரர் மணிவேல் என்பவர் சிகிக்சைக்கு அழைத்து வந்தார். மேற்படி செல்வராஜை பரிசோதித்தபோது, தனக்கு தெரிந்த 20 ஆண் நபர்களால் இரும்பு பைப்பால் அடித்ததாகவும் மற்றும் கத்தியால் 18.04.2019 அன்று மதியம் 02.30 மணியளவில் பொன்பரப்பியில் தன்னை வெட்டியாகவும் கூறினார். அவருக்கு கீழ் கண்ட காயங்கள் காணப்பட்டன. தலையில் வலது உச்சி பகுதியில் 4X2x1cm அளவில் ஒரு வெட்டு காயம் காணப்பட்டது. மேல்சிசிக்சைக்காக தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்டு, 20.04.2019 அன்று காலை 09.28 மணியளவில் அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிச்சை செய்த மருத்துவர் மாரிமுத்து, தன்னுடைய அறிக்கையில் காயத்தின் தன்மை சாதாரண காயம் என்றும் கருத்துரை வழங்கினார். அவர் வழங்கிய கருத்துரையின் படி இறுதி கருத்துரையாக செல்வராஜுக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை சாதாரண காயங்கள் என்றும் சான்று அளித்தேன். அந்த காயங்கள் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கூர்மையாக ஆயுதத்தால் தாக்கினால் மேற்படி காயம் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் இருக்கலாம். நான் செல்வராஜுக்கு வழங்கிய காயச்சான்று **அ.த.சா.ஆ.**17 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

அதே தேதியில் மதியம் 05.00 மணியளவில் பொன்பரப்பி ஊரை சேர்ந்த தேவா, த/பெ.கருப்பன், வயது 19 ஆண் என்பவரை அவரது சித்தப்பா மணிவேல் என்பவர் சிகிக்சைக்கு அழைத்து வந்தார். மேற்படி தேவாவை பரிசோதித்தபோது, 18.04.2019 அன்று மதியம் 02.30 மணியளவில் பொன்பரப்பியில் தனக்கு தெரிந்த 4 ஆண் நபர்களால் கத்தியால் வெட்டியதாகவும், கட்டையால் அடித்ததாகவும் கூறினார். அவருக்கு கீழ் கண்ட காயங்கள் காணப்பட்டன. தலையில் இடது முன்பக்கத்தில் (நெத்தியில்) 2X2x1.5 cm அளவில் ஒரு வெட்டு காயம் காணப்பட்டது. மேல்சிசிக்சைக்காக தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்டு, 20.04.2019 அன்று காலை 09.27 மணியளவில் அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிச்சை செய்த மருத்துவர் மாரிமுத்து, தன்னுடைய அறிக்கையில் காயத்தின் தன்மை சாதாரண காயம் என்றும் கருத்துரை வழங்கினார். அவர் வழங்கிய கருத்துரையின் படி இறுதி கருத்துரையாக தேவாவுக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை சாதாரண காயங்கள் என்றும் சான்று அளித்தேன். மேற்படி காயங்கள் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். நான் தேவாவுக்கு வழங்கிய காயச்சான்று **அ.த.சா.ஆ.**18 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

அதே தேதியில் மாலை 07.15 மணியளவில் பொன்பரப்பி ஊரை சேர்ந்த கோவிந்தராஜ், த/பெ.நியாஸ்தான், வயது 50 ஆண் என்பவரை அவரது மகன் விக்னேஷ் என்பவர் சிகிக்சைக்கு அழைத்து வந்தார். மேற்படி நபரை பரிசோதித்தபோது, 18.04.2019 அன்று மதியம் 05.00 மணியளவில் பொன்பரப்பியில் தனக்கு தெரிந்த 3 ஆண் நபர்களால் கையால் அடித்ததாகவும் கூறினார். அவருக்கு கீழ் கண்ட காயங்கள் காணப்பட்டன. 1. நெஞ்சின் நடுப்பகுதியில் 2x2 cm அளவில் கன்றிய காயம் காணப்பட்டது. 2. இடது கன்னத்தில் 2x1 cm அளவில் கன்றிய காயம் காணப்பட்டது. இறுதி கருத்துரையாக மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை சாதாரண காயங்கள் என்றும் நான் சான்று அளித்தேன். மேற்படி காயங்கள் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். நான் கோவிந்தராஜிக்கு வழங்கிய காயச்சான்று **அ.த.சா.ஆ.19** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

அதே தேதியில் மாலை 06.30 மணியளவில் பொன்பரப்பி ஊரை சேர்ந்த ராஜேந்திரன், த/பெ.குள்ளன், வயது 57 ஆண் என்பவரை அவரது பக்கத்தில் இருந்த சிவக்குமார் என்பவர் சிகிக்சைக்கு அழைத்து வந்தார். மேற்படி நபரை பரிசோதித்தபோது, 18.04.2019 அன்று மதியம் 02.00 மணியளவில் பொன்பரப்பியில் தனக்கு தெரிந்த 1 ஆண் நபரால் கையால் தாக்கியதாக கூறினார். அவருக்கு கீழ் கண்ட காயங்கள் காணப்பட்டன. இடது முன்னங்கையில் 4x4 cm அளவில் கன்றிய காயம் காணப்பட்டது. இறுதி கருத்துரையாக மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை சாதாரண காயம் என்றும் நான் சான்று அளித்தேன். மேற்படி காயம் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். நான் ராஜேந்திரனுக்கு வழங்கிய காயச்சான்று **அ.த.சா.ஆ.**20 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

அதே தேதியில் இரவு 07.00 மணியளவில் பொன்பரப்பி ஊரை சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி, த/பெ.சின்னசாமி, வயது 50 ஆண் என்பவரை அவரது சகோதரர் சிவக்குமார் என்பவர் சிகிக்சைக்கு அழைத்து வந்தார். மேற்படி நபரை பரிசோதித்தபோது, தனக்கு தெரிந்த 1 ஆண் நபர் கருங்கல்லால் 02.00 மணி அளவில் அடித்ததாக கூறினார். அவருக்கு கீழ் கண்ட காயங்கள் காணப்பட்டன. 1. வயிற்றின் அடி மற்றும் நடுப்பகுதியில் 2X2 cm அளவில் ஒரு கன்றிய காயம் காணப்பட்டது. 2. வலது புஜத்தில் 2x2 cm அளவில் சிறாய்ப்பு காயம் இருந்தது. மேல்சிசிக்சைக்காக அரியலூர் அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்டு, அங்கு அவருக்கு சிகிச்சை செய்த மருத்துவர் சுரேஷ்குமார், தன்னுடைய அறிக்கையில் மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை சாதாரண காயம் என்றும் கருத்துரை வழங்கியுள்ளார். அவர் வழங்கிய கருத்துரையின் படி இறுதி கருத்துரையாக கிருஷ்ணமூர்த்திக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை சாதாரண காயங்கள் என்றும் சான்று அளித்தேன். அந்த காயங்கள் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் ஏற்பட வாய்ப்புண்டு. நான் கிருஷ்ணமூர்த்திக்கு வழங்கிய காயச்சான்று **அ.த.சா.ஆ.**21 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

அதே தேதியில் இரவு 07.00 மணியளவில் பொன்பரப்பி ஊரை சேர்ந்த மணிமேகலை, க/பெ.கருப்பன், வயது 52 பெண் என்பவரை அவரது கோமதி என்பவர் சிகிக்சைக்கு

அழைத்து வந்தார். மேற்படி மணிமேகலையை பரிசோதித்தபோது, தனக்கு தெரிந்த 2 ஆண் நபர்களால் கருங்கற்கல்லால் 18.04.2019 அன்று மாலை 04.00 மணியளவில் பொன்பரப்பியில் தன்னை தாக்கியதாக கூறினார். அவருக்கு கீழ் கண்ட காயங்கள் காணப்பட்டன. தலையில் இடது உச்சி பகுதியில் 2X2x1 cm அளவில் ஒரு கிழிந்த காயம் காணப்பட்டது. மேல்சிசிக்சைக்காக தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்டு, 20.04.2019 அன்று காலை 09.24 மணியளவில் அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிச்சை செய்த மருத்துவர் மாரிமுத்து, தன்னுடைய அறிக்கையில் காயத்தின் தன்மை சாதாரண காயம் என்றும் கருத்துரை வழங்கினார். அவர் வழங்கிய கருத்துரையின் படி இறுதி கருத்துரையாக மணிமேகலைக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை சாதாரண காயங்கள் என்றும் சான்று அளித்தேன். அந்த காயங்கள் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் இருக்கலாம். நான் மணிமேகலைக்கு வழங்கிய காயச்சான்று **அ.த.சா.ஆ.**22 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

அதே தேதியில் மாலை 06.30 மணியளவில் பொன்பரப்பி ஊரை சேர்ந்த வடிவேல், க/பெ.கொட்டாபுலி, வயது 63 ஆண் என்பவரை அவரது அண்ணன் முறையான சிவக்குமார் என்பவர் சிகிக்சைக்கு அழைத்து வந்தார். மேற்படி நபரை பரிசோதித்தபோது, 18.04.2019 அன்று மாலை 02.00 மணியளவில் தனக்கு தெரிந்த 5 ஆண் நபர்களால் மரக்கழியால் அடித்ததாகவும், கத்தியின் பின்புறத்தால் அடித்ததாகவும் பொன்பரப்பியில் தன்னை தாக்கியதாக கூறினார். அவருக்கு கீழ் கண்ட காயங்கள் காணப்பட்டன. இடது உள்ளங்கையில் 4X4 cm அளவில் ஒரு கன்றிய காயம் காணப்பட்டது. மேல்சிசிக்சைக்காக தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்டாலும், மேற்படி நபர் அங்கு சிகிச்சைக்கு சென்று சேரவில்லை. எனவே, அவருக்கு இறுதி கருத்துரை வழங்க முடியவில்லை. அந்த காயங்கள் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் இருக்கலாம். நான் வடிவேலுக்கு வழங்கிய விபத்து பதிவேடு நகல் **அ.த.சா.ஆ.**23 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

அதே தேதியில் மாலை 05.50 மணியளவில் பொன்பரப்பி ஊரை சேர்ந்த அன்பழகன், த/பெ.மொட்டையன், வயது 48 ஆண் என்பவரை அவரது அண்ணன் முறையான சிவக்குமார் என்பவர் சிகிக்சைக்கு அழைத்து வந்தார். மேற்படி நபரை பரிசோதித்தபோது, தனக்கு தெரிந்த 2 ஆண் நபர்களால் மூங்கில் கட்டையால் பொன்பரப்பியில் மதியம் 02.00 மணி அளவில் அடித்ததாக கூறினார். அவருக்கு கீழ் கண்ட காயங்கள் காணப்பட்டன. வலது கை நடுவிரலில் 4X2 cm அளவில் ஒரு கன்றிய காயம் காணப்பட்டது. அவர் மேல்சிசிக்சைக்காக அரியலூர் அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்டு, அங்கு அவருக்கு சிகிச்சை செய்த மருத்துவர் சுரேஷ்குமார், தன்னுடைய அறிக்கையில் மேற்படி நபருக்கு நடுவிரல் சிறு முட்டியில் எலும்பு விலகி இருப்பதால் மேற்படி காயத்தின் தன்மை கொடுங்காயம் என்றும் கருத்துரை வழங்கியுள்ளார். அவர் வழங்கிய கருத்துரையின் படி இறுதி கருத்துரையாக மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை கொடுங்காயம் காயம் என்றும் சான்று அளித்தேன். அந்த காயங்கள் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் ஏற்பட வாய்ப்புண்டு. நான் அன்பழகனுக்கு வழங்கிய காயச்சான்று **அ.த.சா.ஆ.**24 ஆக குறியீடு செய்யப்படுகின்றது. நான் வழங்கிய காயச்சான்று குறித்து போலீசார் விசாரித்தார்களா என்றால் DSP விசாரித்தார், போலீசாரும் விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் என்னை விசாரித்தபோது, காயம்பட்ட நபர்களுக்கு ஏற்பட்ட காயம் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் ஏற்பட வாய்ப்பு பற்றி சொன்னேனா என்றால் சொன்னேன். இந்த காயங்கள் கூட்டமாக நபர்கள் ஓடும்போது மோதிக் கொண்டாலோ அதனால் கீழே விழுந்தாலோ ஏற்பட வாய்ப்புண்டா என்றால் சில காயங்களுக்கு தான் வாய்ப்பு உண்டு.

**<u>மறு விசாரணை–</u>**இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.